திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின்(வளர்ச்சி)
செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.சு.குமாரி, பி.காம்.,

ந.க.2067/2019/பஅ3 நாள். 05.08.2019.

பொருள் : பணியமைப்பு – ஊரக வளர்ச்சி அலகு – திருவண்ணாமலை மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆண்டுகளுக்கான காலிப்பணியிடங்களுக்கு போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.1577/பிஎஸ்டி–பி/2019, நாள்:20.02.2019.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள் ந.க.2067/2019/பஅ3, நாள்:01.03.2019.
3. தொடர்புடைய ஆவணங்கள்

--------------

**உத்தரவு:**

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி–4, பணியிடங்களுக்கான ஒருங்கிணைந்த சார்நிலை பணிகளுக்கு 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ம் ஆண்டுகளுக்கான காலிபணியிடங்களுக்கு போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆக பணியமர்வு செய்யப்பட்டு பணிபுரியும் கீழ்குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் பணியினை சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 நிலையில் பின்வரும் அட்டவணையில் கலம்–4ல் குறிப்பிட்டுள்ள தேதி முதல் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

**"The regularisation is subject to the outcome of the Writ Petitions pending on the files of the Hon'ble High Court Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examinatiom - IV for the year 2015-16, 2016-17 and 2017-18."**

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | S.இராஜலட்சுமி, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், திருவண்ணாமலை கோட்டம் | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |

| | | | |
|---|---|---|---|
| 2. | S.ஐஸ்வர்யா,<br>சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை—3,<br>ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,<br>திருவண்ணாமலை கோட்டம் | 08.03.2019<br>முற்பகல் | 08.03.2019<br>முற்பகல் |

2. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி பொது விதி எண்.23(a)(i)—ன் படி, இவ்வாணையில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இவரின் தகுதிகாண்பருவம் துவங்கும்.

3. இவர் தகுதிகாண் பருவகாலம் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் ஆகும்.

4. இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினருக்கான தேர்வுகள் மற்றும் Office Automation தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)
திருவண்ணாமலை.

பெறுநர்:

சம்மந்தப்பட்ட பணியாளர்கள் — உரிய வழிமுறையாக.

நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) / (தணிக்கை), திருவண்ணாமலை கோட்டம்.

நகல்: "பஅ3" இருப்பு கோப்பிற்கு.

மே.கு.க.எண்.அ1/1550/2019

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்
(தணிக்கை) அலுவலகம்,
திருவண்ணாமலை கோட்டம்.
நாள்: 16.09.2019

//அனுப்பப்படுகிறது//

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை),
திருவண்ணாமலை

பெறுநர்

திருமதி.சீ.ராஜலட்சுமி,
சுருக்கெழுத்து தட்டச்சர்,
ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை)
அலுவலகம்,
திருவண்ணாமலை கோட்டம்.